## **ஒரு பார்வை - பகுதி 1**

**இப்ராஹீம் (அலை) வீட்டிற்கு வந்த மலக்குகள், லூத் (அலை) சமூகத்து மக்களை அழிக்கும் பணியைப் பற்றி அறிவிக்கிறார்கள். மனிதனும், ஜின்னும் படைக்கப்பட்டதற்கான காரணம் கூறப்பட்டுள்ளது. ஸூரா அத்தூர் மறுமை நாளின் யதார்த்தத்தை வலியுறுத்துவதன் மூலம் தொடங்குகிறது. காஃபிர்கள் அல்லாஹ்வை மறுத்ததற்கான தண்டனையை நரகத்தில் எதிர்கொள்வார்கள். அதே நேரத்தில் உண்மையான முஃமின்கள் சொர்க்கத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள்.**

## **தராவிஹ் - 23: (ரக்அத் 1 முதல் 4)**

### **ஸூரா - 51, அத்தரியாத்; வசனம்: 31 - 60; பிரிவு: 2 - 3**

1. **இப்ராஹீம் (அலை) அத்தூதர்களை நோக்கி, "தூதர்களே! உங்களுடைய காரியம் என்ன?" என்று வினவினார். அதற்கு அவர்கள், "குற்றவாளிகளான ஒரு சமூகத்தினர் (ஓரினச்சேர்க்கை புரிந்த லூத் (அலை) சமூகத்தினர்) மீது சுட்ட களிமண் கற்களை எறிவதற்காக நாங்கள் அனுப்பப்பட்டுள்ளோம். அவை, வரம்பு மீறிவர்களுக்காக இறைவனால் அடையாளமிடப்பட்டவை" என்று அவர்கள் கூறினார்கள். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)**

2. **அங்கு முஸ்லிம்களின் வீடு என ஒன்றுதான் இருந்தது. அந்த ஊரிலிருந்து முஸ்லிம்கள் அனைவரையும் அல்லாஹ் வெளியேற்றி விட்டான். நோவினை தரும் வேதனையை அஞ்சுகிறவர்களுக்கு இதில் ஓர் அத்தாட்சியை விட்டு வைத்தான். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 2)**

3. **அல்லாஹ் தன் கரங்களாலேயே வானங்களைக் கட்டியெழுப்பினான். மேலும் அல்லாஹ்விற்கு அவற்றை**

விரிவடையச் செய்வதற்கான முழுசக்தியும் உண்டு. (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 3)

4. அல்லாஹ் பூமியை விரிப்பாக ஆக்கினான். அவற்றை அவன் எவ்வளவு சிறப்பாக விரித்துள்ளான்! (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 3)

5. அல்லாஹ் ஜின்களையும், மனிதர்களையும் அவனை வணங்குவதற்காகவே படைத்தான். அவர்களிடமிருந்து எந்த பொருளையும் அல்லாஹ் எதிர்பார்க்கவில்லை. மேலும் அவர்கள் அல்லாஹ்வுக்கு உணவு அளிக்க வேண்டுமென்றும் அவன் எதிர்பார்க்கவில்லை. (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 3)

6. நிச்சயமாக அல்லாஹ்தான் எல்லோருக்கும் உணவு அளித்துக் கொண்டிருப்பவன். பலம் மிக்கவன்; உறுதியானவன். (ஸூரா - அத்தரியாத்; பிரிவு: 3)

**ஸூரா - 52, அத்தூர்; வசனம்: 1 - 49; பிரிவு: 1 - 2**

7. தூர் (மலை) மீது சத்தியமாக! (அங்கு மூஸா (அலை) அவர்களுக்கு தௌராத் வேதம் கொடுக்கப்பட்டது). மெல்லிய தோலில் எழுதி, விரித்து வைக்கப்பட்ட வேதத்தின் மீது சத்தியமாக! (இது ஒவ்வொரு மனிதனின் செயல் பதிவேடு). வளமாக்கப்பட்ட (பைத்துல் மஃமூர்) ஆலயத்தின் மீது சத்தியமாக! (இது மலக்குகள் தினமும் அல்லாஹ்வை வணங்கி தவாப் செய்யும், வானத்திலுள்ள கஃபாவின் மாதிரி ஆலயம்). (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

8. உயர்த்தப்பட்ட முகட்டின் (வானத்தின்) மீது சத்தியமாக! பொங்கும் கடலின் மீது சத்தியமாக! நிச்சயமாக இறைவனின் தண்டனை நிகழ்ந்தே தீரும். அதைத் தடுப்பவர் யாருமில்லை. (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

9. கியாமத் நாளில் கா∴பிர்களை நரக நெருப்பின் பக்கம் இழுத்துச் சென்று, “எதனை நீங்கள் பொய்யென்று கூறி மறுத்து வந்தீர்களோ, அத்தகைய நெருப்பு இதுதான். இப்போது இதில் நீங்கள் எரிந்து சாம்பலாவீர்கள். நீங்கள் இதை பொறுத்துக்கொண்டாலும் அல்லது உங்களால் பொறுக்கமுடியாவிட்டாலும், இரண்டுமே ஒன்றுதான். நீங்கள் செய்த தீமைகளுக்கு உண்டான தண்டனைதான் இவை” என்று அவர்களுக்குச் சொல்லப்படும். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

10. பயபக்தியுடையவர்கள் சுவர்க்கச் சோலைகளிலும், (இறையருளின்) சுகபோகங்களிலும் இருப்பார்கள். அவர்களுடைய இறைவன் அவர்களுக்கு வழங்கியதை அனுபவித்தவர்களாக இருப்பார்கள். இறைவன் நரக வேதனையிலிருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொண்டான். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

11. தாம் செய்த நன்மைக்காக, அவர்கள் சுவர்க்கத்தில் தாராளமாக உண்டும், பருகியும் இருப்பார்கள். வரிசையாகப் போடப்பட்ட மெத்தையுடன் கூடிய கட்டிலின் மீது சாய்ந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள். மேலும், அழகிய கண்களையுடைய மங்கையரை (ஹூருல் ஈன்களை) அவர்களுக்கு துணைவியராக்கப்படும். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

12. இன்னும் அவர்கள் விரும்பும் பழங்களையும், இறைச்சியையும் நாம் அவர்களுக்குக் கொடுத்துக் கொண்டிருப்போம். அங்கே ஒருவருக்கொருவர் (மதுக்) கிண்ணங்களை பரிமாறிக்கொள்வார்கள். (மதுவினால்) அங்கு வீணான பேச்சோ, பாவச்செயலோ இருக்காது. (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

13. (சிப்பிக்குள்) மறைந்த முத்துகளைப் போன்ற சிறுவர்கள், அவர்களுக்கு பணிவிடை செய்ய, அவர்களைச் சுற்றி வலம் வந்து கொண்டே இருப்பார்கள். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 1)

14. நிராகரிப்பவர்கள், தொடர்ந்து நிராகரித்துக் கொண்டேயிருக்கின்றனர். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 2)

15. வானத்திலிருந்து ஒரு துண்டு விழுவதை அவர்கள் பார்த்தால்கூட, அதை அடர்த்தியான மேகம் என்று அவர்கள் கூறிவிடுவார்கள். (ஸூரா - அத்தூர்; பிரிவு: 2)

16. நபியே! அவர்கள் உணர்விழந்து (மடிந்து) போகும் நாளைச் சந்திக்கும்வரை, அவர்களை விட்டு விடுவீர்களாக! (ஸூரா - அத்தூர்; பிரிவு: 2)

17. இதற்குப் பிறகு உமது இறைவனின் தீர்ப்புக்காக பொறுமையுடன் காத்திருப்பீராக! நிச்சயமாக நீர் நம்முடைய கண்ணெதிரே இருக்கின்றீர். மேலும் நீர் (தொழுகைக்காக) எழுந்திருக்கும் சமயத்தில் உம் இறைவனைப் புகழ்ந்து தஸ்பீஹு செய்வீராக! இரவின் ஒரு பாகத்திலும், நட்சத்திரங்கள் மறையும் நேரத்திலும் அவனைத் (துதி செய்து) தஸ்பீஹு செய்வீராக! (ஸூரா - அத்தூர்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 2

முதல் வஹீ வந்த காட்சிகளை விவரித்து ஸூரா அந்நஜ்மு தொடங்குகிறது. அப்போது ஜிப்ரயீல் (அலை) தனது அசல் வடிவத்தில் தோன்றினார்கள். நபி (ஸல்) அவர்களின் விண்ணுலக பயணத்தின்போது, அவர்கள் கண்ட சொர்க்கம் மற்றும் பிற அடையாளங்களின் காட்சிகளை விவரிக்கிறது. மனிதர்களின் சிரிப்பு, அழுகை, செல்வம், மகிழ்ச்சி, வாழ்வு, மரணம் போன்ற வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்தையும் அல்லாஹ் எவ்வாறு கட்டுப்படுத்துகிறான் என்பதை நினைவூட்டுகிறது. அல்லாஹ்வின் எந்த அருட்கொடையில் நீங்கள் தொடர்ந்து சந்தேகத்தில் இருப்பீர்கள் என்று அல்லாஹ் அப்போது கேள்வி எழுப்புகிறான். அல்லாஹ்வை மறுத்ததனால், நூஹ் (அலை), ஆத் மக்களை அல்லாஹ் எவ்வாறு அழித்தான் என்பதை ஸூரா அல்கமர் நினைவூட்டுகிறது.

## தராவிஹ் - 23: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 53, அந்நஜ்மு; வசனம்: 1 - 62; பிரிவு: 1 - 3

1. மறைகின்ற நட்சத்திரத்தின் மீது சத்தியமாக! உங்கள் தோழர் (நபி முஹம்மத்) வழி தவறிடவில்லை; அவர் தவறான வழியில் செல்லவுமில்லை. தம் மனவிருப்பப்படி (எதையும்) பேசுவதில்லை. (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

2. நபி (ஸல்) அவர்களுக்கு வல்லமை மிக்க ஜிப்ரயீல் (அலை) இந்த குர்ஆனைக் கற்றுக் கொடுத்தார். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

3. முதல் வசனங்கள் வஹீயாக இறங்கிய காட்சி: வானவர் ஜிப்ரயீல் (அலை) தன்னுடைய உருவத்தில் பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார். வானத்திலிருந்து பூமி வரை அகலவாக்கில் காட்சியளித்தார். அவர் நபிகளாரை மிகவும் நெருங்கி வந்தார். அந்த நெருக்கம் இரண்டு புருவ இடைவெளி அளவுக்கு அல்லது அதைவிட இன்னும் அதிக நெருக்கமாக இருந்தது. பிறகு அவர் அல்லாஹ்விடமிருந்து கொண்டு வந்த

வஹீயை - வேதஅறிவிப்பை நபிகளாருக்கு அறிவித்தார். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

4. நபி (ஸல்) அவர்கள், மீண்டும் ஒருமுறை ஜிப்ரயீல் (அலை) அவர்களை (மிஃராஜின் போது) 'ஸித்ரத்துல் முன்தஹா' என்ற இலந்தை மரத்தருகில் கண்டார்கள். (ஏழு வானங்கள் முடிகின்ற எல்லைப் பகுதியில் இருக்கக்கூடிய இலந்தை மரம் அது. அதைத் தாண்டி யாரும் செல்ல முடியாது). (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

5. அதனருகில் தான் 'ஜன்னதுல் மஃவா' - தங்குவதற்கான சுவர்க்கச் சோலை உள்ளது. நபி (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மிகப் பெரும் சான்றுகளில் சிலவற்றைக் கண்டார்கள். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

6. லாத், உஜ்ஜா, மனாத் ஆகிய தெய்வங்களை கவனித்தீர்களா? (இவை அரபுக் குரைஷிகள் வணங்கிவந்த கடவுள்களின் பெயர்கள். அவைகளை கடவுளின் மகள்களாக அவர்கள் கருதினர்). இவைகள் நீங்களும், உங்களுடைய முன்னோர்களும் சூட்டிக்கொண்ட வெறும் கற்பனைப் பெயர்கள். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

7. நிச்சயமாக நிராகரிப்போர்கள் வீணான ஊகத்தையும், மன விருப்பங்களையுமே பின்பற்றுகிறார்கள். எனினும் நிச்சயமாக அவர்களுடைய இறைவனிடமிருந்து, அவர்களுக்கு நேரான வழி வந்தே இருக்கிறது. (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 1)

8. சிறு பிழைகளைத் தவிர, பெரும் பாவங்களையும் மானக்கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறவர்களே நற்கூலிக்கு உரியவர்கள். நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 2)

9. நீங்களே உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள். யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கறிவான். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 2)

10. எந்த ஆன்மாவும் இன்னொருவருடைய பாவச் சுமையை சுமக்கப் போவதில்லை. நிச்சயமாக மனிதன் எதனை முயற்சி செய்கின்றானோ, அதுதான் அவனுக்குக் கிடைக்கும். அவனது முயற்சி பின்னர் அவனுக்குக் காண்பிக்கப்படும். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

11. அல்லாஹ்தான் ஒருவரை சிரிக்க வைக்கின்றான். அழவும் வைக்கின்றான். நிச்சயமாக அவன்தான் மரணிக்கச் செய்கின்றான்; உயிர்ப்பிக்கவும் செய்கிறான். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

12. நிச்சயமாக அவனே ஆண், பெண் என்று ஜோடியாகப் படைத்தான். கருவறையில் செலுத்தப்படும் போதுள்ள இந்திரியத் துளியைக் கொண்டு அவர்களை படைத்தான். நிச்சயமாக, (மறுமை வாழ்விற்காக) மறுமுறை உயிர் கொடுத்து எழுப்புவதும் அவன் மீதே பொறுப்பாக இருக்கிறது. (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

13. அல்லாஹ்தான் ஒருவருக்கு செல்வத்தையும், மகிழ்ச்சியையும் வழங்குகின்றான். (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

14. ஆகவே, உம்முடைய இறைவனின் அருட்கொடைகளில் எதனை நீர் சந்தேகிக்கிறீர்? (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

15. கியாமத் நாள் நெருங்கி விட்டது. அல்லாஹ்வையன்றி யாரும் அதனை வெளிப்படுத்திக் காட்ட முடியாது. (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)

16. **இந்த செய்தி குறித்து நீங்கள் ஆச்சர்யப்படுகிறீர்களா? இதனை கேட்டபிறகுமா அழுவதற்குப் பதிலாக நீங்கள் சிரிக்கின்றீர்கள்? உங்களுடைய நேரத்தை வீணடித்து பொழுதுபோக்குவதற்கு பதில் அல்லாஹ்விற்கு முன் ஸஜ்தா செய்யுங்கள்; அவனை வணங்குங்கள். (ஸஜ்தா - 13). (ஸூரா - அந்நஜ்மு; பிரிவு: 3)**

**ஸூரா - 54, அல்கமர்; வசனம்: 1 - 22; பிரிவு: 1**

17. **யுகமுடிவு நாள் நெருங்கி விட்டது. (அதன் அறிகுறியாக) சந்திரன் பிளந்து விட்டது. (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)**

18. **எனினும், நிராகரிப்போர் ஓர் அத்தாட்சியைப் பார்த்தால், (அதைப்) புறக்கணித்து விடுகிறார்கள். "இது வழமையாக நடைபெறும் சூனியம் தான்" என்றும் கூறுகிறார்கள். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)**

19. **அந்நாளில், அவர்களுக்கு வெறுப்பான (கேள்வி கணக்கு) விஷயத்திற்காக அழைப்பாளர் (வானவர் இஸ்ராபீல்) அழைப்பார். பார்வைகளைத் தாழ்த்தியவர்களாக, பரவிக் கிடக்கும் வெட்டுக்கிளிகளைப் போல் அவர்கள் தங்களுடைய கப்ர் - மண்ணறையிலிருந்து வெளியேறுவார்கள். மேலும் "இது மிகவும் துக்க நாள்" என்றும் சொல்வார்கள். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)**

20. **நூஹ் (அலை) அவர்கள் 950 வருடம் தம் மக்களுக்கு உபதேசித்து வந்தார்கள். இறுதியாக அல்லாஹ்விடம், "நிச்சயமாக நான் தோல்வியடைந்தவனாக இருக்கிறேன். எனக்கு நீ உதவி செய்வாயாக" என்று பிரார்த்தித்தார்கள். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)**

21. **ஆகவே அல்லாஹ், வேகமாகக் கொட்டுகின்ற மழைகளின் மூலம் வானங்களின் கதவுகளைத் திறந்து விட்டான். அல்லாஹ் தன் கண்ணெதிரே பாதுகாப்புடன் நூஹ் (அலை) ஏறிய கப்பலை ஓடச் செய்தான். இது, தம் சமூகத்தாரால்**

நிராகரிக்கப்பட்ட நூஹூ (அலை) அவர்களுக்கான பிரதிபலனாகும். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)

22. நிச்சயாமாக நாம், இந்த குர்ஆனை அறிவுரை பெறுவதற்கு எளிதாக்கியுள்ளோம். இதனை சிந்தித்து படிப்பினை பெறுவோர் யாரேனும் உண்டா? (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)

23. ஆத் சமூகத்தினர் அல்லாஹ்வினுடைய அருட்கொடையைப் பொய்யெனக் கருதியதால், பேரிரைச்சலுடைய காற்று அல்லாஹ்விடமிருந்து தண்டனையாக வந்தது. அப்போது அவர்கள் வேருடன் பிடுங்கி எறியப்பட்ட பேரீச்ச மரத்தின் அடித்தூரைப் போன்று ஆனார்கள். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)

24. நிச்சயாமாக இந்த குர்ஆனை புரிந்து அறிவுரை பெறுவதற்காக எளிதாக்கியுள்ளோம். இதனை சிந்தித்து படிப்பினை பெறுவோர் யாரேனும் உண்டா? (ஸூரா - அல்கமர்; பிரிவு: 1)

## ஒரு பார்வை - பகுதி 3

அல்லாஹ்வை மறுத்ததனால், ஸமூத், லூத் (அலை) மற்றும் ஃபிர்அவ்ன் மக்களை அல்லாஹ் எவ்வாறு அழித்தான் என்பதை ஸூரா அல்கமர் நினைவூட்டுகிறது. இவ்வாறாக பல உதாரணங்களைக் கூறி அல்லாஹ் நமக்கு நினைவூட்டுவது: குர்ஆனை படிக்கவும், புரிந்துகொள்ளவும் எளிதானது; எனவே இதனை சிந்தித்து படிப்பினை பெறுவோர் யாராவது இருக்கிறார்களா? ஜின்கள் மற்றும் மனிதர்களுக்கு அல்லாஹ் அளித்த எண்ணற்ற அருட்கொடைகளை நினைவூட்டுகிறான். மேலும் அல்லாஹ்வின் எந்த அருட்கொடைகளை அவர்கள் மறுக்கிறார்கள் என கேள்வி எழுப்புகிறான்..

## தராவிஹ் - 23: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 54, அல்கமர்; வசனம்: 23 - 55; பிரிவு: 2 - 3

1. ஸமூத் கூட்டத்தினரை சோதிக்கும் பொருட்டு நாம் ஒரு பெண் ஒட்டகத்தை அனுப்பி வைத்தோம். (அவ்வூரிலுள்ள கிணற்றின்) தண்ணீர் அவர்களுக்கும், அந்த ஒட்டகத்திற்கும் இடையில் பங்கிடப்பட்டிருந்தது. (ஸூரா - அல்கமர்; பிரிவு: 2)

2. ஆனால் அவர்கள் அந்த ஒட்டகத்தை அடித்துக் கொன்று விட்டனர். அல்லாஹ் அவர்களுக்கு பேரிடியை அனுப்பி வைத்தான். அதனால் அவர்கள் பிடுங்கி எறியப்பட்ட குப்பைகளைப் போலாகி விட்டனர். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 2)

3. நிச்சயாமாக இந்த குர்ஆனை அறிவுரை பெறுவதற்காக எளிதாக்கியுள்ளோம். இதனை சிந்தித்து படிப்பினை பெறுவோர் யாரேனும் உண்டா? (ஸூரா - அல்கமர்; பிரிவு: 2)

4. லூத் (அலை) அவர்களின் கூட்டத்தினர் எப்படி வரம்பு மீறினார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அவர்கள்

அனைவரின் மீதும் கல்மாரி மழையை அல்லாஹ் பொழிவித்தான். லூத் (அலை) மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர் (இரு மகள்கள்) தவிர, அதில் எவரும் தப்பவில்லை. (ஸூரா - அல்கமர்; பிரிவு: 2)

5. நிச்சயாமாக இந்த குர்ஆனை புரிந்து கொள்ளவும், மனனம் செய்யவும் அல்லாஹ் இலகுவாக்கி வைத்துள்ளான். இதனை சிந்தித்து படிப்பினை பெறுவோர் யாரேனும் உண்டா? (ஸூரா - அல்கமர்; பிரிவு: 2)

6. ஃபிர்அவ்னுடைய சமூகத்தினரிடம் எச்சரிக்கை செய்யும் தூதர்கள் வந்தனர். ஆனால் அவர்கள் அல்லாஹ்வுடைய அத்தாட்சிகள் அனைத்தையும் பொய்யாக்கினர். அல்லாஹ் அவர்களை கடலில் மூழ்கடித்தான். (ஸூரா - அல்கமர்; பிரிவு: 3)

7. நிச்சயமாக நாம் ஒவ்வொரு பொருளையும் (குறிப்பான) அளவின்படியே படைத்திருக்கிறோம். தமது கட்டளையானது இமைப்பொழுதைப் போன்றதே தவிர வேறொன்றுமில்லை. (ஸூரா - அல்கமர்; பிரிவு: 3)

**ஸூரா - 55, அர்ரஹ்மான்; வசனம்: 1 - 45; பிரிவு: 1 - 2**

1. அளவற்ற அருளாளன். அவன்தான் குர்ஆனை கற்றுக் கொடுத்தான். அவனே மனிதனைப் படைத்தான். அவனே மனிதனுக்கு தெளிவாகப் பேசக் கற்றுக் கொடுத்தான். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

2. அல்லாஹ், வானத்தை உயர்த்தி, தராசையும் அமைத்தான். எனவே அதில் நீங்கள் சமநிலை தவறாமல், வரம்பு மீறாமல் இருக்கவேண்டும். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

3. இந்தப் பூமியை படைப்பினங்களுக்கு வசதியாக அவனே அமைத்தான். அதில் கனிவகைகளும், பாளைகளையுடைய

பேரீத்த மரங்களும், மூடிய தோலுடைய தானிய வகைகளும், செடி கொடிகளும் உள்ளன. (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

4. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

5. அவன், காய்ந்த களி மண்ணிலிருந்து சுட்ட மண்பாண்டம் போன்று மனிதனைப் படைத்தான். தீப்பிழம்பிலிருந்து ஜின்னை படைத்தான். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

6. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

7. அல்லாஹ்வே, இரு கிழக்கிற்கும், இரு மேற்கிற்கும் இறைவனாவான். அவன், இரு கடல்களையும் ஓரிடத்தில் ஒன்றிணைத்தான். ஆனால் அவ்விரண்டிற்குமிடையே ஒரு தடை உண்டு. அவை அதைத் தாண்டாது. முத்துக்களும், பவளங்களும் அவற்றிலிருந்து வெளிவருகின்றன. கடலில் மலைகளைப் போல் உயர்ந்து செல்லும் கப்பல்களும் அவனுக்கே உரியன. (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

8. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 1)

9. இப்பூமியிலுள்ள அனைவரும் அழிந்து விடக் கூடியவர்களே. சங்கைக்குரிய, வல்லமை மிக்க உம்முடைய இறைவனின் முகம் மட்டுமே நிலைத்திருக்கும். இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 2)

10. வானங்களிலும், பூமியிலுமுள்ள அனைத்தும் தன் தேவைகளை அல்லாஹ்விடமே முறையிடுகின்றன. அதற்காக அவன் ஒவ்வொரு நாளும் தன் வேலைகளில் இடைவிடாது செயல்படுகிறான். ஆனால் உங்களுக்கான கேள்வி கணக்கு நாளின் போது உங்களை அழைக்க அல்லாஹ் ஆயத்தமாவான். இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 2)

11. கியாமத் நாளில் குற்றவாளிகள் அவர்களின் முகத்திலுள்ள அடையாளங்களைக் கொண்டு அறியப்படுவார்கள். முன் நெற்றி ரோமங்களையும், கால்களையும் பிடித்து இழுத்துச் செல்லப்படுவார்கள். குற்றவாளிகள் எதனைப் பொய்யெனக் கூறி மறுத்து வந்தார்களோ, அந்த நரகம் இதுதான் என்று சொல்லப்படும். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 2)

12. அவர்கள் நரகத்திற்கும், கொதிக்கும் நீருக்கும் இடையில் சுற்றிக் கொண்டேயிருப்பார்கள். இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 2)

## ஒரு பார்வை - பகுதி 4

ஸூரா அல்வாகிஆ தீர்ப்பு நாளின் காட்சிகளை விவரித்து தொடங்குகிறது. மனிதகுலம் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்படும்: அந்தஸ்தில் முதன்மையானவர்கள், வலது புறம் உள்ளவர்கள் மற்றும் இடது புறம் உள்ளவர்கள். மரணத்தருவாயில் இருக்கின்ற மனிதன் தனது தலைவிதியைப் பற்றி சிந்திக்கும்படி கேட்கிறது. அவன் அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்களில் ஒருவனா அல்லது வலப்புறத்தாரில் ஒருவனா அல்லது இடப்புறமுள்ள கெட்ட பொய்யர்களில் ஒருவனா எனக்கேட்டு ஸூரா அல்வாகிஆ நிறைவுறுகிறது.

## தராவிஹ் - 23: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 55, அர்ரஹ்மான்; வசனம்: 46 - 78; பிரிவு: 3

1. தன் இறைவனின் திருச்சமூகத்தைக் குறித்து யார் பயந்தார்களோ, அவர்களுக்கு இரண்டு சுவனப் பூஞ்சோலைகள் உண்டு. அங்கு பசுமையான பல கிளைகளுடைய மரங்கள் இருக்கும். இரு நீரூற்றுகள் இருக்கும். அனைத்துப் பழ வகைகளிலும் இரு ஜோடிகள் இருக்கும். அவர்கள் கட்டில் மீது சாய்ந்தவர்களாக இருப்பார்கள். சிவந்த மாணிக்கத்தைப் போன்றும், முத்துக்களைப் போன்றும், மனித இனத்திலும், ஜின் இனத்திலும் இதுவரையில் யாரும் தீண்டிராத, பார்வையைத் தாழ்த்திய வண்ணமுள்ள சுவனத்துப் பேரழகிகள் அதிலே அவர்களுக்காக இருப்பார்கள். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

2. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

3. நன்மையான காரியத்திற்கு நன்மையைத் தவிர வேறு கூலி எதுவுமில்லை. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

4. அவ்விரு சுவனத்தோட்டங்களுக்கு அடுத்த நிலையுடைய, அடர்த்தியான பச்சை நிறமுள்ள இன்னும் இரண்டு சுவர்க்கங்கள் உள்ளன. அங்கு பொங்கி வழிகின்ற இரு ஊற்றுக்கள் உள்ளன. அதிலே பழங்களும், பேரிச்சம் பழங்களும், மாதுளைகளும் உள்ளன. (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

5. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

6. ஒவ்வொரு சுவர்க்கத்திலும் அழகிய நற்குணமுள்ள (பேரழகிகள்) ஹூரீன்கள் இருப்பார்கள். நீண்ட விழியுடைய அவர்கள், கூடாரங்களிலே இருப்பார்கள். பச்சைக் கம்பளத்தின் மீதும், அழகிய விரிப்பின் மீதும் சாய்ந்த வண்ணமாக இருப்பார்கள். (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

7. இந்நிலையில், மனு, ஜின் ஆகிய நீங்களிருவரும் உங்கள் இறைவனின் அருட்கொடைகளில் எதனை மறுக்கப்போகிறீர்கள்? (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

8. நபியே! மகத்துவமும் கண்ணியமும் மிக்க உம்முடைய இறைவனின் திருப்பெயர் மிகவும் பாக்கியமுடையது. (ஸூரா - அர்ரஹ்மான்; பிரிவு: 3)

**ஸூரா - 56, அல்வாகிஆ; வசனம்: 1 - 96; பிரிவு: 1 - 3**

9. மாபெரும் அந்நிகழ்வு நிகழும் போது, அந்நிகழ்வை ஏற்க மறுப்போர் யாருமில்லை. அது (தீயோரைத்) தாழ்த்தி விடும்; (நல்லோரை) உயர்த்தி விடும். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 1)

10. கியாமத் நாளில் நீங்கள் மூன்று பிரிவுகளாக இருப்பீர்கள். முதல் பிரிவினர்: வலது புறத்தார். இவர்கள் நற்பாக்கியம் நிறைந்தவர்கள். இரண்டாம் பிரிவினர்: இடது புறத்தார். இவர்கள் துர்பாக்கியம் நிறைந்தவர்கள். மூன்றாம் பிரிவினர்; (நன்மையில்) முந்தியவர்கள். இவர்கள் அல்லாஹ்வுக்கு நெருக்கமானவர்கள். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 1)

11. முந்தியவர்கள் எனக் கூறப்படுபவர்கள், முந்தைய தலைமுறையைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள். பிந்தைய தலைமுறையின் சிலரும் அதில் இருப்பார்கள். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 1)

12. அவர்கள் தங்கக்கட்டிலில் இருப்பார்கள். இளமை மாறாச் சிறுவர்கள் அவர்களை வலம் வருவார்கள். தெளிந்த பானங்களால் நிறம்பிய கிண்ணங்களோடு அவர்களுக்கு பணிவிடை செய்வார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கின்ற பழங்களும், அவர்கள் விரும்புகின்ற பறவையின் இறைச்சியும் அவர்களுக்கு சாப்பிட கிடைக்கும். மேலும் சிப்பிக்குள் மறைக்கப்பட்ட நீண்ட கண்கள் கொண்ட சுவனத்து அழகிகளும் அவர்களுக்கு உண்டு. (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 1)

13. வலது புறத்தார்கள், முள்ளில்லா இலந்தை மரத்தடியிலும், கனிகள் நிறைந்த முள் மரத்தடியிலும், நீண்ட நிழலிலும், ஒலித்தோடிக் கொண்டிருக்கும் நீரின் அருகிலும் இருப்பார்கள். ஏராளமான கனிவகைகளை உண்டு கழிப்பர். மேலும் அல்லாஹ் அவர்களுக்கு சமவயதுடைய இயற்கையிலேயே அவர்கள் மீது பாசம் செலுத்துகின்ற கன்னிப் பெண்களைப்

பிரத்யேகமாக அவன் படைத்துள்ளான். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 1)

14. இடது புறத்தார்கள் (அடையும் தாழ்வுநிலை) பற்றி என்ன சொல்வது! அவர்கள் அனல் காற்றிலும், நன்கு கொதிக்கும் நீரிலும், அடர்ந்த கரும்புகையின் நிழலிலும் இருப்பார்கள். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

15. அவர்கள் பெரும் பாவத்தின் மீது நிலைத்து இருந்தவர்கள். மேலும், “நாங்கள் இறந்து மண்ணாகவும், எலும்புகளாகவும் ஆகி விட்ட பின்பும், நாங்கள் மீண்டும் எழுப்பப் படுவோமா?” என்று அவர்கள் கேட்டுக் கொண்டு இருந்தனர். மேலும், "எங்கள் முன்னோர்களான மூதாதயர்களுமா எழுப்பப்படுவர்?” என்றும் கூறினர். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

16. ஜக்கூம் என்ற (கள்ளி) மரத்திலிருந்து அவர்கள் சாப்பிடுவார்கள். அதைக் கொண்டே தங்கள் வயிறுகளை நிரப்புவார்கள். அதன் பின் கொதிக்கும் நீரையே, தாகித்த ஒட்டகம் குடிப்பது போன்று குடிப்பார்கள். இதுதான் நியாயத் தீர்ப்பு நாளில் அவர்களுக்குக் கிடைக்கும் உபசரிப்பாகும். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

17. பூமியில் பயிரிடுவதை என்றாவது நீங்கள் கவனித்தீர்களா? அவற்றை நீங்கள் முளைக்கச் செய்கிறீர்களா? அல்லது நாம் முளைக்கச் செய்கிறோமா? நாம் நாடினால் அதனை ஒன்றுமில்லாமல் குப்பைக் கூளமாக ஆக்கியிருப்போம். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

18. நீங்கள் குடிக்கும் நீரைக் கவனித்தீர்களா? மேகத்திலிருந்து அதை நீங்கள் இறக்கினீர்களா? அல்லது நாம் இறக்கினோமா? நாம் நாடினால் அதை உப்பாக ஆக்கியிருப்போம்.

(இவற்றுக்கெல்லாம்) நீங்கள் நன்றி செலுத்த வேண்டாமா? (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

19. நீங்கள் மூட்டும் நெருப்பை கவனித்தீர்களா? அதன் மரத்தை நீங்கள் உருவாக்கினீர்களா? அல்லது நாம் உருவாக்கினோமா? (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

20. அதனை நினைவூட்டலாகவும், பயணிகளுக்கு பயன்பாடாகவும் உண்டாக்கினோம். எனவே, மகத்தான உமது இறைவனின் பெயரைத் (தஸ்பீஹ் செய்து) துதி பாடுங்கள். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 2)

21. “நிச்சயமாக இது கண்ணியம் மிக்க குர்ஆன் ஆகும்”, என்று அல்லாஹ் நட்சத்திரங்களின் அமைவிடங்களின் மீது சத்தியம் செய்து சொல்கின்றான். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

22. தூய்மையான (வான)வர்களைத் தவிர வேறு யாரும் இதனைத் தொடமாட்டார்கள். (மகத்தான குர்ஆனின்) இச்செய்தியையா நீங்கள் நம்ப மறுக்கிறீர்கள்? (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

23. மரணதருவாயில் இருக்கின்ற மனிதன், அல்லாஹ்விற்கு நெருக்கமானவர்களில் ஒருவனாக இருந்தால், அவனுக்கு நல்ல சுகமும், அழகிய வாழ்வாதாரமும், பாக்கியமிக்க சுவனச் சோலைகளும் கிடைக்கும். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

24. அவர் வலப்புறத்தாரில் ஒருவராக இருந்தால், "உமக்கு ஸலாம் - சாந்தி உண்டாகட்டுமாக! நீர் வலப்புறத்தாரில் ஒருவர்!" என்று அவருக்கு நற்செய்தி கூறப்படும். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

25. அவர், வழி கெட்ட பொய்யர்களில் ஒருவராக இருந்தால், கொதிநீரும், நரகமுமே அவருக்கான உபசரிப்பாகும். (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

26. நிச்சயமாக இதுதான் உறுதியான உண்மையாகும். எனவே, மகத்தான உமது இறைவனின் பெயரைத் (தஸ்பீஹ் செய்து) துதி பாடுவீராக! (ஸூரா - அல்வாகிஆ; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 5

ஸூரா அல்ஹதீதில் நம்பிக்கையாளர்களை, அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்ய வலியுறுத்துகிறான். இதனால் உங்களுக்கு பல மடங்கு திருப்பிச் செலுத்தப்படும்; மேலும் தாராளமான வெகுமதியும் வழங்கப்படும். கியாமத் நாளில், முஃமின்கள் முன், ஒளி படர்ந்து பிரகாசிப்பார்கள். நயவஞ்சகர்களின் முடிவு நிராகரிப்பாளர்களைப் போன்றதாகவே இருக்கும்.

## தராவிஹ் - 23: (ரக்அத் 17 முதல் 20)

### ஸூரா - 57, அல்ஹதீத்; வசனம்: 1 - 29; பிரிவு: 1 - 4

1. வானங்கள், பூமி ஆகியவற்றில் இருப்பவை அல்லாஹ்வை தஸ்பீஹு - துதிக்கின்றன. அவன் வல்லமை மிக்கவன்; ஞானம் மிக்கவன். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 1)

2. அல்லாஹ்தான் முதலாமவன் (அவனுக்கு முன்னர் யாரும் கிடையாது). அவன்தான் இறுதியானவன் (அவனுக்கு அடுத்து யாரும் கிடையாது). அவன்தான் மிக வெளிப்படையானவன் (அவனை விட வெளிப்படையானவன் வேறு யாரும் கிடையாது). அவன்தான் அந்தரங்கமானவன் (அவனை விட அந்தரங்கமானவன் வேறு யாரும் கிடையாது). அவன் அனைத்துப் பொருள்களையும் நன்கறிந்தவன். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 1)

3. அல்லாஹ், பூமியினுள் நுழைவதையும், அதிலிருந்து வெளியேறுவதையும், வானிலிருந்து இறங்குவதையும், அதில் ஏறுவதையும் அல்லாஹ் அறிகிறான். நீங்கள் எங்கிருந்தாலும் அல்லாஹ் உங்களுடன் இருக்கின்றான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 1)

4. அல்லாஹ் நீங்கள் செய்கின்ற அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான். உங்களது உள்ளங்களில் உள்ளதை அவன் அறிவான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 1)

5. அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாமலிருக்க உங்களுக்கு என்ன நேர்ந்தது? வானங்களிலும் பூமியிலுள்ள அனைத்திற்குமான உரிமை அல்லாஹ்வுக்கே உரியது. (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 1)

6. அல்லாஹ்வுக்கு அழகிய கடன் கொடுப்பவர் யார்? அவ்வாறாயின், அவருக்கு அதை அவன் பன்மடங்காகப் பெருக்குவான். மேலும் அவருக்கு கண்ணியமான பிரதிபலன் வழங்குவான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

7. கியாமத் நாளில், முஃமினான ஆண்கள், பெண்கள் ஆகியோரின் ஒளி, அவர்களுக்கு முன்னாலும் வலதுபுறத்திலும் படர்ந்து செல்லும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

8. நயவஞ்சகர்களான ஆண்களும், பெண்களும் “எங்களை சிறிது (திரும்பிப்) பாருங்கள்! உங்களுடைய ஒளியிலிருந்து சிறிது நாங்கள் எடுத்துக் கொள்கிறோம்” என்று முஃமின்களிடம் கேட்பார்கள். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

9. “நீங்கள் உங்கள் பின்னுக்குச் சென்று ஒளியைத் தேடுங்கள்” என்று நயவஞ்சகர்களுக்கு சொல்லப்படும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

10. பிறகு முஃமின்களுக்கும், அவர்களுக்குமிடையே தடுப்புச்சுவர் அமைக்கப்படும். அதில் ஒரு கதவும் இருக்கும். அதனின் உட்புறத்தில் அல்லாஹ்வின் கிருபை நிறைந்திருக்கும்.

வெளிப்புறத்தில் நரகத்தினுடைய வேதனை இருக்கும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

11. கடைசி நிமிடம் வரை அல்லாஹ்வை ஏற்கவில்லை; ஷைத்தான் அவர்களைத் தடுத்து, ஏமாற்றிவிட்டான் என்பதை அப்போது நயவஞ்சகர்களுக்கு உணர்த்தப்படும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 2)

12. நிச்சயமாக இவ்வுலக வாழ்க்கையானது விளையாட்டும், கேளிக்கையும் நிறைந்தது. உங்களுக்கு மத்தியில் பெருமை பாராட்டுவதும், பொருட்செல்வத்தையும், குழந்தைச் செல்வத்தையும் அதிகரித்துக் கொள்வதும்தான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

13. (இது) மழைக்கு ஒப்பாகும். அது பயிர்களை விளையச் செய்து விவசாயிகளை ஆனந்தப் படுத்துகிறது. ஆனால், சீக்கிரமே அப்பயிர்கள் உலர்ந்து மஞ்சள் நிறமாகி, கூளமாகி விடுவதை (நபியே!) நீர் காண்பீர். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

14. பூமியில் என்ன நிகழ்ந்தாலும், உங்களுக்கு எந்த நிகழ்தாலும் அதனை அல்லாஹ் உண்டாக்குவதற்கு முன்னரே (லவ்ஹுல் மஹ்ஃபூள்) ஏட்டில் எழுதப்பட்டுவிட்டது. நிச்சயமாக அது அல்லாஹ்வுக்கு மிக எளிதான காரியமாகும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

15. உங்களை விட்டுத் தவறிப்போன ஒன்றுக்காக நீங்கள் வருந்தலாகாது. அவன் உங்களுக்கு வழங்கிய ஒன்றில் நீங்கள் பெருமிதம் கொள்ளலாகாது என்பதே இதற்குக் காரணம். நிச்சயமாக ஆணவங்கொண்டு பெருமையடிக்கும் எவரையும் அல்லாஹ் விரும்பமாட்டான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

16. யார் கஞ்சத்தனம் செய்து பிற மக்களையும் கஞ்சத்தனம் செய்யுமாறு தூண்டுகிறார்களோ அவர்கள், அல்லாஹ் தேவையற்றவன்; புகழுக்குரியவன் என்பதை அறிந்து கொள்ளவேண்டும். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

17. அல்லாஹ்தான் இரும்பை இறக்கினான். அதில் பெரும் சக்தியும், மக்களுக்குத் தேவையான பல பலன்களும் உண்டு. தனக்கும், தன் தூதர்களுக்கும் யார் மறைவிலும் உதவி செய்கிறார்களோ அவர்களை அல்லாஹ் இனங்காண வேண்டும் என்பதற்காகவே இவ்வாறு செய்தான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 3)

18. ஈமான் கொண்டோரே! அல்லாஹ்வை அஞ்சி நடந்து கொள்ளுங்கள். அவனது தூதரை ஏற்றுக் கொள்ளுங்கள். (அவ்வாறு செய்தால்) தன்னுடைய கிருபையிலிருந்து இரு மடங்கினை அல்லாஹ் வழங்கிடுவான். எதன் மூலம் நீங்கள் (நேர்வழியில்) நடப்பீர்களோ அத்தகைய ஒளியினை உங்களுக்கு வழங்கிடுவான். உங்களுக்கு அவன் மன்னிப்பும் வழங்குவான். மேலும் அல்லாஹ் மன்னிப்பவனும் கிருபையாளனுமாக இருக்கின்றான். (ஸூரா - அல்ஹதீத்; பிரிவு: 4)

---------------------------------------------------------